அலுவலகம் செல்லும் / செல்லவிருக்கும் எல்லாப் பெண்களுக்கும் பயனுள்ள அட்டகாசத் தொடர்!

13

# ஆ∴பிஸ் எனும் சொர்க்கம்!




சுமதி நாராயணன்
மனித வள மேம்பாட்டு ஆலோசகர்


## குறிக்கோள்களை அடைவது

கடந்த இதழ்களில் நேர நிர்வாகத்தைப் பற்றி தெரிந்து கொண்டோம். நேர நிர்வாகத்தின் முக்கியத்துவத்தை அறிந்தோம். எந்த அளவு இடைவெளி இல்லாமல் நாம் ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் உணர்ந்தோம்.

இந்த ஓட்டத்திற்கு ஓர்அர்த்தம் இல்லாமல் ஓடுகிறோமோ என்ற கேள்வி சில சமயம் தோன்றியிருக்கலாம். எதை நோக்கி ஓடுகிறோம் என்பது தெரியாமல் ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதால், இவ்வளவு உழைத்தும் மகிழ்ச்சி இல்லை. இது சில நேரம் கேள்வியாக இருந்து விடுகிறது.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் எதற்காக என்ற அர்த்தத்தோடு இருந்தால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் உழைக்கலாம், எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் ஓடலாம்.

தினசரி வேலைகளை செய்யவே முடியவில்லை, இதில் எங்கே என் குறிக் கோள்களை அடைவது என யோசிக்கிறீர்களா? நேர நிர்வாகம் வாழ்க்கை நிர்வாகம் என்று சொல்லலாம். நாம் என்ன அடைய விரும்பு கிறோமோ அதற்கு தேவையான செயல்களுக்கு தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கும் பொழுது நமது குறிக்கோளை நோக்கி நாம் நகருவோம். இல்லையென்றால் அது ஒரு கனவாகவே இருந்து விடும். சரி, இதை எப்படி நடைமுறை படுத்தலாம் என்பதைப் பார்ப்போமா?

நம் வாழ்க்கைக் குறிக்கோள்கள் என்னவென்பதை தெளிவு படுத்துவது முதல் படி. எனக்கு என்ன வேண்டும் என்பதை உங்கள் ஆழ் மனதை கேட்டுப் பாருங்கள். ஐந்து வருடத்தில் நான் எப்படி இருக்க வேண்டும், என்ன வளர்ச்சி அடைய வேண்டும், என்னிடம் என்ன வைத்திருக்க வேண்டும் - இம் மூன்று கேள்விகள் நம் எண்ணங்களைத் தூண்டி விடும். இதை குறித்துக் கொள்வது மிகவும் முக்கியம். ஆசைகளை எழுதும் பொழுது தெளிவு கிடைக்கும். எவ்வளவு தோன்றினாலும் குறித்துக் கொள்ள வேண்டும். நமது குறிக்கோள்கள் எல்லா விதத்திலும் இருக்க வேண்டும். பொருளாதார நிலை, அறிவுத்திறன், நமது தொழிலில் முன்னேற்றம், குடும்ப உறவுகள், உணர்ச்சிகளை சமாளிப்பது, ஆன்மிக ஈடுபாடு என்று எல்லா விதத்திலும் முழுமை ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு - நன்றாக பணம் சேர்ப்பதற்குக் கடுமையாக உழைத்து, ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தாமல் செயல்பட்டால், எதிர்காலத்தில் கனமான பாங்க் பாலன்ஸ் இருக்கும், ஆனால் அதை அனுபவிக்க ஆரோக்கியம் இருக்குமா என்பது சந்தேகம். அதென்ன, அப்படிச் சொல்லிட் டீங்க என நினைக்கிறீர்களா? நேரத்திற்கு சாப்பிட, தேவையான அளவு தூங்க, உடல் பயிற்சி செய்ய நேரம் இல்லையென்றால், ஆரோக்கியம் அடி படாதா? எதற்கு நாம் நேரம் செலவழிக்கிறோமோ, அதன் பயனை நாம் அடைவோம். அதை அடைய எதை விடுகிறோமோ அதன் விளைவை சந்திக்கத் தான் வேண்டும். ஒரு சக்கரத்தின் விளிம்பு சீராக இருந்தால் தான் அது நேராக ஓடும். இல்லையேல் வளைந்து கோணல்மாணலாக தான் ஓடும். நம் வாழ்க்கையும் சக்கரத்தைப் போல் எல்லா விததிலும் சமமாக இருப்பது முக்கியம்.

இந்தப் பகுதியில் நீங்களும் இடம்பெற வேண்டுமென்றால், அலுவலகப் பின்னணியில் வித்தியாசமான சூழ்நிலைகளில் தங்களுடைய சமீபத்திய புகைப்படம் + டேட்டாவை மொபைல் எண்ணுடன் சேர்த்து mangayarmalar@kalkiweekly.com இ மெயிலில் மட்டுமே அனுப்பவும்.





எழுதும் கனவுகளை நினைவாக்குவதற்குச் செய்ய வேண்டியது - எழுதிய ஆசைகள் லிஸ்டில் எது குறுகியகால குறிக்கோள், நெடுங்காலக் குறிக் கோள்கள் என்பதைப் பிரிக்க வேண்டும். மூன்றி லிருந்து ஐந்து வருடங்களில் அடையக் கூடியவை நெடுங்காலக் குறிக்கோள். ஒன்றிலிருந்து மூன்று வருடங்களில் அடைய விரும்புபவை குறுகிய கால குறிக் கோள்கள். ஒரு வருடத்திற்குள் அடைய நினைப்பவை நம் செயல்பாடு திட்டத்திற்குள் கொண்டு வர வேண்டும்.

உதாரணத்திற்கு, வேலையில் முன்னேற்றம் அடைவதைப் பற்றி யோசிப்போம். அடுத்த கட்டத் திற்குச் செல்வதற்கு வேண்டிய திறன்களை வளர்த்து வது நம் செயல்பாடு திட்டத்தில் இருக்க வேண்டும். மூன்று வருடத்தில் ப்ரமோஷன் கிடைக்க வேண்டும் என நினைத்தால், அதற்குத் தயாராக வேண்டாமா? நம்முடைய பெர்ஃபார்மன்ஸ் எப்படி இருக்கு என்பதை தெரிந்து கொண்டு, திருத்திக் கொள்வது. அடுத்தபடி நம் தற்போதைய நிலையிலிருந்து அடுத்த பதவிக்குத் தேவையான திறன்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இது நம் செயல்பாடு திட்டத் தில் முக்கியமான அங்கமாக இருக்க வேண்டும்.

இதை அடைவதற்கு நம் சக ஊழியர்களிடம் ஒத்துழைப்பு தேவை. வாய்ப்புகள் அமைய, மற்றவர் களின் ஒத்துழைப்பு தேவை. நாம் எவ்வாறு அவர் களோடு நல்லுறவு வைத்திருக்கிறோம் என்பது முக்கியம். இதை பற்றி இத்தொடரில் ஏற்கெனவே நாம் எழுதி உள்ளோம். சக ஊழியர்கள் நமக்கு உதவி செய்யாவிட்டாலும், தடைகள் ஏற்படுத்தாமல் இருப்பதற்கு நல்லுறவு முக்கியம்.

நாம் போடும் திட்டம் முழுவதுமாக நிஜமாகுமா என்ற கேள்வி எழும். அனுபவத்தில் தெரிந்தது என்னவென்றால், நினைத்ததில் நூறு சதவிகிதம் நடக்காவிட்டாலும், எண்பது சதவிகிதம் நடக்கும். நம் முயற்சியும் நம்பிக்கையும் நம் கையில் உள்ளது. நம்பிக்கை இல்லாத முயற்சி நல்வினையாவது கடினம். ''நாம் முயற்சி எடுத்திருந்தால் வெற்றி அடைந்திருப்போமா?'' என்ற ஆதங்கத்துக்கு உள்ளாக வேண்டாமே.

இப்படி ஓர் அர்த்தத்தோடு நம் வேலையை அணுகும் பொழுது, நம் வேலையை ஈடுபாடுடன் செய்யத் தூண்டும். இந்த வேலை என் குறிக்கோளில் வெற்றி அடைய முக்கியம் என்ற உணர்வு ஏற்படும். ''நான் செய்வது, எளிமையான ''டேட்டா'' ப்ரொ செஸிங் ஆனாலும், பிழையின்றி செய்வதில் நான் முதன்மையானவள். இந்த வேலையில் கிடைக்கும் வருமானம், என் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு முக்கியம்'' என்று நமது வேலைகளில் எதிர் கொள் ளும் பல இடையூறுகள், சவாலான, வாய்ப்பாகத் தெரியும். அது புரிந்து கொள்ளாத பாஸானாலும், கற்றுக் கொள்ள கடினமான வேலை யானாலும் சரி. சமாளித்து விடலாம். ஆஃபீஸை சொர்க்கமாக்கி விடலாம்.

**(படி..ஏறுவோம்)**